**மு.க. ஸ்டாலின்**
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.
22-4-2022

அன்புடையீர் !

தமிழகத்தில் 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தல்களில் கிராம ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ல் வரையறுக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகளை செவ்வனே நீங்கள் நிறைவேற்றிட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தன்னிறைவு பெற்ற கிராமங்களை உருவாக்குவது மட்டுமல்ல, சமூக நீதியை ஏற்படுத்தவும் சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும் நீங்கள் பணியாற்றிட வேண்டும்.

***இந்தியாவின் எதிர்காலம் அதன் கிராமங்களில்தான் உள்ளது என்ற அண்ணல் காந்தியடிகளின்*** கருத்திற்கேற்ப அரசின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதிலும், இயற்கை வள ஆதாரங்களை பாதுகாப்பதிலும், அனைத்துத் தரப்பு மக்களின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் உங்கள் தலைமையின் கீழ் உள்ள ஊராட்சியானது தேசிய அளவில் ஒரு முன் மாதிரி ஊராட்சியாக விளங்கிடும் வகையில் தாங்கள் பணியாற்றிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி நிர்வாகத்தினை எளிமைப்படுத்தும் வகையிலும், மக்களுக்கு நமது பல்வேறு சேவைகள் எளிதில் சென்றடையும் வகையிலும் ஊராட்சிகளில் மின்னணு நிர்வாகம் உங்கள் ஒத்துழைப்புடன் இவ்வாண்டு செயல்படுத்தப்படும்.

***இந்திய திருநாட்டின் 75வது சுதந்திர ஆண்டை அமுதப் பெருவிழாவாக*** கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், நீடித்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals) அடையும் வகையில், இனங்காணப்பட்டுள்ள 9 இனங்களான வறுமை ஒழிப்பு, ஆரோக்கியமான வாழ்வு, குழந்தைநேயம், குடிநீர்வசதி, சமூகப்பாதுகாப்பு, சிறந்த நிர்வாகம், அடிப்படை வசதிகள், பசுமையும் தூய்மையும் மற்றும் பாலின சமத்துவம் ஆகியவற்றை உங்களுடைய ஊராட்சி அடைய வேண்டும் என்ற என் விருப்பத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சிறப்பாக செயல்படும் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு வரும் ஆண்டில் இருந்து தமிழக அரசால் ***'உத்தமர் காந்தி'*** விருது வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் பணிகளுக்கு இந்த அரசு முழு ஒத்துழைப்பினை நல்கும் என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, மக்களுக்கான உங்களது சேவைகள் சிறப்பானதாக அமைந்திட அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

தமிழ்நாடு முதலமைச்சரின்
**தேசிய ஊராட்சிகள் தின**
**வாழ்த்துமடல்**

அன்புடன்
**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# தமிழ்நாடு முதலமைச்சரின் தேசிய ஊராட்சிகள் தின வாழ்த்துமடல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை